www.Padasalai.Net www.TrbTnpsc.com

T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

பதிவு எண்: 

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 100

THOOTHUKUDI DISTRICT

### பகுதி - அ

15×1=15

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ...............
   அ) குலை வகை ஆ) மணிவகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) கொண்டல் - 1. மேற்கு
   ஆ) கோடை - 2. தெற்கு
   இ) வாடை - 3. கிழக்கு
   ஈ) தென்றல் - 4. வடக்கு
   அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2
3. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை .............
   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
4. 'குலசேகர ஆழ்வார் வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனை யார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே ...............
   அ) மரபுவழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
   இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி
5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக்குறிப்பு உணர்த்தும் செய்தி ............
   அ) சங்க இலக்கியத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
6. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
8. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ................
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
9. மருதநிலத்திற்குரிய தெய்வம் .............
   அ) முருகன் ஆ) திருமால் இ) இந்திரன் ஈ) கொற்றவை
10. நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?
    அ) கொன்றைவேந்தன் ஆ) காசிக்கலம்பகம்
    இ) வெற்றி வேற்கை ஈ) காசிக்காண்டம்
11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ............. வேண்டினார்.
    அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) கருணையன், பூக்களுக்காக
    இ) எலிசபெத், தமக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக:

காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள் உப்புப் பகருநர்
பாசவர், வாசவர் பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ..............
அ) கம்பராமாயணம் ஆ) தேம்பாவணி இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்
13. 'ஓசுநர்' - பொருள் எழுதுக.
அ) வெற்றிலை விற்பவர் ஆ) ஓவியர் இ) தையல்காரர் ஈ) எண்ணெய் விற்பவர்
14. இப்பாடலில் வரும் சீர் எதுகைச் சொற்களை எழுதுக:
அ) காழியர், கள்நொடை ஆ) பாசவர், வாசவர் இ) பாசவர், ஓசுநர் ஈ) காழியர், ஆட்டியர்
15. இப்பாடலினை இயற்றிய ஆசிரியர் ..............
அ) கம்பர் ஆ) வீரமாமுனிவர் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) இளங்கோவடிகள்

## பகுதி - II

### *பிரிவு - 1*

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க (21 வது கட்டாய வினா) 4×2=8

16. *விடைக்கேற்ற வினா அமைக்க :*
அ) தேவநேயப் பாவாணர் உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தார்.
ஆ) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.
17. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
18. வசனக்கவிதை - குறிப்பு வரைக.
19. சாந்தமானதொடு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித்தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
20. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
21. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### *பிரிவு - 2*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க: 5×2=10

22. கீழ்க்காணும் சொற்களில் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக:
அ) பழம் = ............ ஆ) ஆடு = ..............
23. *தொகைச் சொற்களை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க :*
அ) கீரி பாம்பு ஆ) மலை வாழ்வார்
24. *சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க:*
அ) முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும் ; நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
ஆ) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்
25. *இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:* அ) சிலை - சீலை ஆ) வளி - வாளி
26. *கலைச்சொல் தருக :* அ) Space Technology ஆ) Intellectual
27. *ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக:* அ) தஞ்சாவூர் ஆ) மன்னார்குடி
28. *உவமைகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக:*
அ) தாமரை இலை நீர் போல ஆ) சிலை மேல் எழுத்து போல

## பகுதி - III

### *பிரிவு - 1*

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 2×3=6

29. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.
31. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக:*

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையது என்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும், சிலவகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ பலவாகவும், கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பா கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு.

வினாக்கள் :

அ) தமிழ்நாட்டின் பொருள் வளத்தை எவ்வாறு அறியலாம்?

ஆ) கோதுமையின் வகைகள் சிலவற்றை எழுதுக.

இ) இவ்வுரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 2×3=6

(34 வது கட்டாய வினா)

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகிறது?

34. அ) "சிறுதாம்பு தொடுத்த" எனத்தொடங்கும் முல்லைப் பாட்டு பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) "தண்டலை மயில்க" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 2×3=6

35. பெயக்கண்டும் நஞ்சுண் டமையவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர் - இக்குறட்பாவிற்கு அலகிடுதல் தருக.

36. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 5×5=25

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(அல்லது)


ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



41. வீட்டு எண் 24, பிள்ளையார் கோவில் தெரு, மதுரை அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த கவின் மகன் சஞ்சய் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை க.சஞ்சய் எனக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்ப படிவத்தினை நிரப்புக.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. அ) *மொழிபெயர்க்க :*

The Golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The Milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in Percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently every where and makes everything pleasant.

(அல்லது)

ஆ) *காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக:*

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை ; அறிக!

\- கண்ணதாசன்

*மாற்றுத்திறனாளருக்கான மாற்று வினா:*

தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர். "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். இவர் தமிழ்நாட்டின் வழிவழி நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர். அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம் செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர். அவர் தான் கூத்துப் பட்டறை ந. முத்துசாமி என்ற கலைஞாயிறு. இவர் இந்திய அரசின் தாமரைத் திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்.

அ) 'கலை ஞாயிறு' என அழைக்கப்பட்டவர் யார்?
ஆ) ந.முத்துச்சாமி எக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றார்?
இ) ந. முத்துசாமியின் நாடகங்கள் பெரும்பாலும் எம்மாற்றங்கள் பற்றி பேசின?
ஈ) ந. முத்துசாமி பெற்ற விருதுகள் யாவை?
உ) தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்?

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க :** **3×8=24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ) அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:

அ) சான்றோர் வளர்த்த தமிழ் - முன்னுரை - பிள்ளைத்தமிழ் பேசி - சதகம் சமைத்து - பரணிபாடி - கலம்பகம் கண்டு - உலாவந்து - அந்தாதி - கோவை நூல்கள் - முடிவுரை.(அல்லது)

ஆ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் - முன்னுரை - இளமையும் கல்வியும் - முதல் விண்வெளிப் பயணம் - இறுதிப்பயணம் - விருதுகளும் அங்கீகாரமும் - முடிவுரை.

\---------

AMEER TUITION CENTRE
KAYAL PATTANAM
PH: 9488005009

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண்-ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ/மாணவியின் கையெழுத்து

AMEER TUITION CENTRE
KAYALPATTANAM

www.Padasalai.Net